**செய்தி வெளியீடு எண்: 498** **நாள்: 14.07.2020**

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு, கொரோனா நோய்த் தொற்றினை கண்டறிய, இதுவரை தமிழ்நாடு முழுவதும் 105 பரிசோதனை மையங்களை ஏற்படுத்தி, நேற்று வரை 15 லட்சத்து 85 ஆயிரத்து 782 நபர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டது.

இதன் ஒரு பகுதியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், முதலமைச்சரின் முகாம் அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் 13.7.2020 அன்று கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. **இந்த பரிசோதனையின் முடிவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கொரோனா தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டது.** மேலும், முதலமைச்சரின் முகாம் அலுவலகத்தில் பணிபுரியும் எவருக்கும் கொரோனா தொற்று இல்லை என்பதும் உறுதிசெய்யப்பட்டது.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**